வணிகவரித்துறை

# மக்கள் சாசனம்

## எமது குறிக்கோள்

நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கும் தொழில் மற்றும் வணிகத்தின் நன்மைக்காக, சட்டங்களையும் விதிமுறைகளையும் செம்மையாகச் செயல்படுத்தி மிகச் சிறந்ததோர் சாதனையை ஏற்படுத்த வேண்டுமென்ற வணிகவரித் துறையின் உறுதியினை அறிவிப்பதே இச்சாசனம்.

## எமது கடமை

- வணிகப் பெருமக்களுக்கு மிகச் சிறந்த முறையில் சேவை செய்வது
- வெளிப்படையான நிருவாகம் அளிப்பது
- காலந்தவறாமை மற்றும் திறமையான வினையாக்கம்
- மதிப்பு, மரியாதையுடன் இணக்கமான நல்லுறவு

- நேர்மையுடன் நீதி வழுவாத தன்மை
- பொறுப்பும் நம்பகத் தன்மையும் மிக்க செயலாக்கம்.

## எமது எதிர்பார்ப்புகள்

- வணிகங்களைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தலை உரிய காலத்தே செய்தல்
- கணக்குகளை முறையாகப் பேணுதல்
- விற்பனை விவர மாதாந்திரப் படிவங்களைக் குறித்த நாளில் தாக்கல் செய்தல்
- உரிய வரிகளை உரிய நாளில் செலுத்துதல்
- இறுதி வரி விதிப்புக்கு, கணக்குகளை உரிய நேரத்தே சமர்ப்பித்தல்.

## எமது நிலைப்பாடு

- படிவங்கள், விண்ணப்பங்கள், கடிதங்கள், அறிவிப்புகள், தெரிவிப்புகள் போன்றவை கிடைக்கப் பெற்றவுடன் அல்லது அதிகபட்சமாக 7 நாட்களுக்குள் ஒப்புகை அளித்தல்.



- கடிதங்கள் கிடைக்கப்பெற்ற 30 வேலை நாட்களுக்குள் அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுத்தல்
- தவிர்க்க முடியாத சூழலால் அல்லது வேறு விதமான சிக்கல்களால் முடிவு எடுப்பதில் தாமதமேற்படுமாயின் உரிய காரணத்தை உடன் தெரிவித்தல்
- திருப்பித் தர வேண்டிய பணத்தை, முறையான கோரிக்கை கிடைக்கப்பெற்ற 90 நாட்களுக்குள் வழங்குதல்
- ஆதாரங்களுடன் கூடிய முறையான - முழுமையான முறையீடுகள் பெறப் பட்டால், சோதனைச் சாவடிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட சரக்குகளை உடனடியாக விடுவித்தல்
- வேண்டும்பொழுது, விற்பனைப் படிவங் களை உடனுக்குடன் வழங்குதல்.

## எமது உறுதி மொழி

- அனைத்து அலுவலர்களும் பெயர்வில்லை அணிந்து அடையாளச் சான்றுடன் பணியில் ஈடுபடுவர்
- பெறப்படும் தனிப்பட்ட - வணிகம் தொடர்பான தகவல்கள் ரகசியமாக வைக்கப்படும்
- சோதனைச் சாவடிகளில், உரிய காரணத்தைத் தெரிவித்த பின்னரே, சரக்குகள் நிறுத்தி வைக்கப்படும். இறுதி ஆணை வழங்குவதற்கு முன், வணிகர்கள் தங்களின் நிலையை விளக்க, முழுமையான வாய்ப்பு வழங்கப்படும்.
- தகுதியுடைய அலுவலர்களின் அதிகாரக் கடிதத்துடன் மட்டுமே வணிக இடங்கள் தணிக்கை செய்யப்படும்
- மேல்முறையீடு தொடர்பான அனைத்துத் தகவல்களும், அவற்றைக் கேட்கும் வணிகர்களுக்கு தெரிவிக்கப்படும்
- கொள்கை மற்றும் நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்யும்பொழுது, வணிக



முன்னேற்றத்தில் அக்கறையுள்ள அனைத்து அமைப்புகளுடனும் கலந்து ஆலோசிக்கப் படும். சட்டம் மற்றும் விதிகளில் செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்து உரிய விளம்பரங்கள் செய்யப்படும்.

- வணிகவரித் துறை மற்றும் அதன் நடைமுறைகள் தொடர்பான தகவல்கள் பெற விரும்புவோர், சென்னையில், சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.
- வணிகர்கள் மத்தியில் நிலவும் கருத்துக் களையும், எங்களின், மேற்கூறப்பட்ட தரமான சேவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு எங்கள் செயல்பாடு களைக் கணிக்கலாம்.

## நலன் நோக்கி

- வணிகர்கள் விண்ணப்பம் தாக்கல் செய்த 30 நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.
- ரூ.200/- செலுத்தி பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொண்டால், அது அந்நிதி யாண்டிற்கும்; ரூ.1000/- செலுத்தி பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொண்டால், அது ஐந்து ஆண்டுகளுக்கும் செல்லுபடியாகும். அவ்வாறே, முறையே நிதியாண்டு முடிந்த பின்னரோ ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னரோ பதிவுச் சான்றிதழினைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.
- வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டு அதன் மூலம் வணிகர்களுக்கு நிதியுதவியும் வணிகர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்க்கு மருத்துவ உதவியும் அவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவியும் வழங்கப்படுகின்றன.
- தேசிய பொதுத் தகவலியல் முறையகத்தின் கணிப்பொறித்தளம் மூலமாக, வணிகவரித் துறை தொடர்பான பொதுவான தகவல்கள், வணிகர்களைப் பதிவு செய்யும்முறை, வரி செலுத்தும் முறை மற்றும் வரிவீதங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.



- தெளிவுரைகள் கோருதல் சம்பந்தமான விண்ணப்பங்களின் மீது வணிகவரி ஆணையர் அவற்றைப் பெற்றுக்கொண்ட 30 நாட்களுக்குள் வரி வீதங்கள் குறித்த தெளிவுரைகளை வழங்குவார். அவ்வாறு வழங்க இயலவில்லையெனில் அவர் இடைக்கால பதிலொன்றை அனுப்பி வைத்து தெளிவுரைகளை 45 நாட்களில் முடிவாக்குவார்.
- முறையாகச் சுட்டிக்காட்டப்பட்ட மற்றும் குறிப்பான புகார்கள் பெறப்பட்டவுடன் ஒப்புகை அளிக்கப்பட்டு, 30 நாட்களுக்குள் இறுதி முடிவு எடுக்கப்பட்டு மனுதாரருக்குத் தெரிவிக்கப்படும்.
- முறையான குறைகள் அல்லது குற்றச் சாட்டுகளை, சென்னையில், சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்தில், இணை ஆணையர் (நிருவாகம்) அவர்கள் தலைமையில்

உள்ள, குறை தீர்க்கும் பிரிவுக்கு அனுப்பலாம்.

## எமது நம்பிக்கை

நாட்டின் வளத்தையும் மக்கள் நலத்தையும் கருத்தில் கொண்டு, உங்கள் வளர்ச்சிக்கு இத்துறை இடையறாது தொய்வின்றி உழைத்திட உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஒத்துழைப்பை யும் நாளும் நாடுகிறோம்.

நன்றி

**மு. கருணாநிதி**

முதலமைச்சர்.